## ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரில்

# உலக முதலீட்டாளர்கள் மாநாடு : முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

## “தமிழ்நாட்டில் தொழில் தொடங்க வாரீர்!” என அழைப்பு விடுத்தார்!

**ஒசாகா (ஜப்பான்), மே 27-**

**சிங்கப்பூரில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் 6 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தான பின். சிங்கப்பூர் நாட்டில் அனைத்து நிகழ்ச்சி களையும் முடித்துக் கொண்டு முதல்வர் அவர்கள் நேற்று முன்தினம் ஜப்பான் சென்றடைந்தார்.**

**ஜப்பானில் உள்ள கான்சாய் விமான நிலையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஜப்பானில் உள்ள இந்தியத் தூதர் உள்ளிட்ட பலர் அவரை வரவேற்றனர்.**

**அதன் விபரம் வருமாறு:-**

தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கத்தில், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ளார். சென்னையில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற உள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்குமாறும் அந்நாட்டு நிறுவனங்களுக்கு முதலமைச்சர் அவர்கள் அழைப்பு விடுத்து வருகிறார்

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை வடிவமைத்திடுவதில் முக்கிய பங்காற்றிடும் விதமாக, 2030-2031 நிதியாண்டிற்குள், தமிழ்நாட்டின் பொருளா தாரத்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு மேம்படச் செய்வதை ஒரு இலட்சிய இலக்காகக் கொண்டு தமிழ்நாடு அரசு செயலாற்றி வருகிறது.

இந்த இலக்கினை அடைந்திட, ரூ.23 இலட்சம் கோடி அளவிற்கு முதலீடுகளை ஈர்த்திடவும், 46 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கிடவும் வேண்டும். இந்த நோக்கத்திற்காக, தொழில் துறை பல்வேறு முதலீட்டாளர்கள் மாநாடுகளை நடத்தி வருகிறது. இதன் மூலம் ஜூலை 2021 முதல் இதுவரை 226 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப் பட்டு, தமிழ்நாட்டில் 2,95,339 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் மற்றும் 4,12,565 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அனைவரையும் உள்ளடக்கிய சமச்சீரான வளர்ச்சியை உறுதி செய்யும் விதமாக, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில், இந்தத் திட்டங்கள் பரவலாக அமைய உள்ளன.

சிங்கப்பூர் சென்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் Temasek. Sembcorp. CapitaLand நிறுவனங் களின் தலைமை செயல் அலுவலர்களை நேற்று சந்தித்து பேசினார். சிங்கப்பூர் உலக முதலீட்டா ளர்கள் மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 6 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தானது.

தொடர்ந்து சிங்கப்பூர் நாட்டின் போக்குவரத்து மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் எஸ் ஈஸ்வரனை சந்தித்து இரு நாடுகளுக்கிடையே உள்ள பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது பற்றியும் புதிய தொழில் முதலீடுகளை தமிழ்நாட்டில் மேற்கொள்வது குறித்தும் உரையாடினார்.

அதன் தொடர்ச்சியாக நேற்று சிங்கப்பூர் நாட்டின் உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் சண்முகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்து பேசினார். சென்னையில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற உள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்தார்.

மாநில நிறுவனங்களுக்கான இணைய பாதுகாப்பு கட்டமைப்பை மேம்படுத்துதல், தரவு தனியுரிமை அம்சங்கள் போன்றவற்றில் அரசு நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு காவல்துறைக்கு ஒத்துழைப்பு அளிப்பது ஆகியவை குறித்து இருவரும் ஆலோ சனை மேற்கொண்டனர்.

சிங்கப்பூர், மதுரை இடையே நேரடி விமானச் சேவையைத் தொடங்கிட உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று முதலமைச்சரிடம் சிங்கப்பூர் அமைச்சர் கோரிக்கை விடுத்தார்.

இதுகுறித்து ஒன்றிய அரசிடம் வலியுறுத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் இறையன்பு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கிருஷ்ணன், மற்றும் அரசு உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.

சிங்கப்பூரில் தனது இரண்டு நாள் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு ஜப்பான் செல்வதற்காக சிங்கப்பூர் விமான நிலையம் சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், செல்லும் வழியில், தமிழர்கள் அதிகமாக வாழும் லிட்டில் இந்தியா பகுதியில் அமைந்துள்ள உணவகத்திற்குச் சென்று தேநீர் அருந்தினார்.

**ஜப்பான் நாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின்!**

அப்போது, அங்குள்ள தமிழ் மக்களைச் சந்தித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்துரையாடினார். தொடர்ந்து அங்கிருந்த ஏராளமானோர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் செல்பி எடுத்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

அதன் பின்னர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஜப்பான் புறப்பட்டுச் சென்றார்.

முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு, இந்திய அளவில் முன்னணி மாநிலங்களுள் ஒன்றாக உள்ளது. அதிலும் குறிப்பாக, ஜப்பானிய முதலீட்டா ளர்கள் பெரிதும் விரும்பும் மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. எண்ணற்ற ஜப்பான் நிறுவனங்கள், தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்து, தங்கள் திட்டங்களை இங்கு நிறுவியுள்ளனர்.

அண்மையில் உலக அளவில் முன்னணி குளிர்சாதன இயந்திரங்கள் தயாரிப்பு நிறுவனமான மிட்சுபிஷி நிறுவனம் 1891 கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

ஜப்பான் நாட்டின் தலைசிறந்த நிறுவனங்களில் முன்னணியில் இருக்கக்கூடிய நிசான் நிறுவனம், பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ரெனால்ட் நிறு வனத்துடன் இணைந்து சமீபத்தில் 3300 கோடி ரூபாய் தமிழ்நாட்டில் முதலீடு செய்தது மட்டுமல்லாமல், தனது தொழில் நடவடிக்கைகளை நம் மாநிலத்தில் மேலும் விரிவாக்கம் செய்து வருகிறது.

இந்த உறவை மேலும் மேம்படுத்தும் வகையில்தான், முதலமைச்சர் அவர்கள் முதலீட்டுக் குழுவுக்குத் தலைமை தாங்கி ஜப்பான் சென்றுள்ளார். அங்கு முன்னணி தொழில்துறைத் தலைவர்களையும், அரசு அதிகாரிகளையும் சந்தித்து, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்று, தமிழ்நாட்டில் முதலீடு மேற்கொள்ள வருமாறு முதலமைச்சர் அவர்கள் அழைப்பு விடுத்தார்.

ஜப்பான் நாட்டில், முதலீட்டு ஊக்குவிப்பு மாநாடும் நடைபெற்று வருகிறது. இதில் பல்வேறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்ப மிடப்பட்டன.

இதுவரை ஜப்பான் சென்றுள்ள அரசுக் குழுக்கள் டோக்கியோ மட்டுமே சென்று வந்துள்ளன. ஒசாகாவில் இந்திய வம்சாவளியினர் அதிக அளவில் வசித்து வருகின்றனர். இங்கு பல முன்னணித் தொழில் நிறுவனங்களும் அமைந்துள்ளன. எனவே, ஒசாகா நகருக்கும் வருகை தரும்படி விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று முதல்முறையாக ஒசாகா நகருக்கு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இந்தக் குழு சென்றது.

ஒசாகாவில், ஜப்பான் வெளியுறவு வர்த்தக நிறுவனமான, ஜெட்ரோ (JETRO) நிறுவனத்துடன் இணைந்து அங்கு நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டார்.

மேலும் முக்கிய நிறுவனங்களின் தலைமை அதிகாரிகளைச் சந்தித்து தமிழ்நாட்டில் முதலீடுகள் மேற்கொள்வதற்கு அழைப்பு விடுத்தார். அதனைத் தொடர்ந்து ஒசாகா வாழ் இந்திய சமூகத்தினர் அளிக்கும் வரவேற்பு நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார்.

டோக்கியோ நகரில் அந்நாட்டின் பொருளாதாரம் வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் நிஷீமுரா யசுதோஷி மற்றும் ஜப்பான் தொழில் நிறுவனமான, ஜெட்ரோ தலைவர் இஷிகுரோ நொரிஹிகோ அவர்களை முதலமைச்சர் அவர்கள் சந்தித்தார். மேலும், 200க்கும் மேற்பட்ட ஜப்பானிய நிறுவனங்கள் கலந்துகொள்ளும் முதலீட்டாளர்கள் மாநாட்டிலும் கலந்துகொண்டார்.

கியோகுடோ மற்றும் ஓம்ரான் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளபட்டன. மேலும் முதல்வர் அவர்கள் அங்குள்ள மேம்பட்ட தொழில் மையத்தைப் பார்வையிட்டார்.



சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுத்திடவும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்த்திடவும் சிங்கப்பூர் நாட்டில் தனது இரண்டு நாள் அரசு முறை பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் (25.5.2023) ஜப்பான் நாட்டின், கான்சாய் விமான நிலையத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, ஒசாகாவிற்கான இந்தியத் தூதர் நிகிலேஷ் கிரி வரவேற்றார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

---

## தமிழ்நாட்டின் தொழில் – பொருளாதார மேம்பாட்டுக்குப் பங்களிக்கும்

# முதலீட்டாளர்களை தமிழ்நாடு சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கும்!

முதல் பக்கத் தொடர்ச்சி...

840 நிறுவனங்கள் இந்தியாவில் தொழில் தொடங்கி நிறுவனங்களை நடத்தி வந்தன. அதில் தமிழ்நாட்டில் மட்டும் 170 நிறுவனங்கள் தங்கள் தொழிற்சாலையை நடத்தி வந்தன. அதற்கு ஒரு அலுவலகமாக அப்போது திறந்து வைக்கப்பட்டது. அதில் பேசும்போது, “ஜப்பான் நாட்டைச் சேர்ந்த தனியார் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க வேண்டும்” என்று நான் கேட்டுக் கொண்டேன். அப்போது பேசிய ஜப்பான் அமைச்சர் மசாயூகி நாஷிமா அவர்கள், “சென்னை என்பது ஆசிய நாடுகளின் நுழைவாயிலாக அமைந்துள்ளது” என்று குறிப்பிட்டார்கள். அதே, ஆசிய நாடுகளின் நுழைவாயிலான சென்னையில் இருந்து நான் வருகை தந்துள்ளேன்.

‘உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை 2024’ ஜனவரி 10 மற்றும் 11 ஆகிய தேதிகளில் சென்னையில் நடத்த தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. அந்த, உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 நிகழ்வுக்கு, கூட்டாளர் நாடாக ஒத்துழைப்பு அளித்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

உலக முதலீட்டாளர் மாநாட்டுக்கு அழைப்பு விடுப்பதற்காக எங்கள் மாநிலத்தில் இருந்து பல்வேறு நாடுகளுக்கு நாங்கள் பயணம் மேற்கொண்டு வருகிறோம். அந்த வரிசையில், முதல் சுற்றுப்பயணமாக சிங்கப்பூர் மற்றும் ஜப்பானுக்கு வந்துள்ளேன். இந்தியாவும் ஜப்பானும் ஆசியாவின் இரண்டு பெரிய மற்றும் பழம்பெரும் ஜனநாயக நாடுகள். குறிப்பாகச் சொல்லப்போனால், ஜப்பான் நாட்டின் அதிகாரப்பூர்வ மேம்பாட்டு உதவியை (Official Development Assistance ODA) அதிகம் பெறும் நாடு இந்தியாதான்.

**இரு நாடுகளுக்கு இடையேயான, பொருளாதார உறவுகள், சமீப காலங்களில் மிகப் பெரும் எழுச்சி கண்டுள்ளது. இந்தியச் சந்தைக்குள் நுழையும் ஜப்பானிய நிறுவனங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்தியாவுக்குள், தமிழ்நாடுதான் ஜப்பானிய முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாக முன்னணியில் விளங்குகிறது.**

**தெற்காசியாவிலேயே, முதலீடுகளை ஈர்த்திட உகந்த மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்திட நாங்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றோம். எண்ணற்ற ஜப்பான் நிறுவனங்கள், தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்து, தங்கள் திட்டங்களை இங்கு நிறுவியுள்ளனர்.**

**நிசான், தோஷிபா, யமஹா, கோமேட்ஸு, யோரோசு, யமஹா ஹிட்டாச்சி மற்றும் யூனிப்ரெஸ்** - போன்ற மிகப் பெரும் நிறுவனங்கள், தங்கள் உற்பத்தித் திட்டங்களை தமிழ்நாட்டில் அமைத்துள்ளன. இது நீண்டு கொண்டே போகும் பட்டியல்.

**தமிழ்நாட்டில் - அதிக அளவில் ஜப்பானியர்கள்!**

ஜப்பான் இந்தியா முதலீடு மேம்பாட்டுக் கூட்டாண் மைத் திட்டத்தின்கீழ் இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள 12 தொழில் நகரியங்களில், 3 நகரியங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன.

தமிழ்நாட்டில், அதிக அளவில் ஜப்பானியர்கள் வசித்து வருகின்றனர் என்ற மகிழ்ச்சியான செய்தியை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

பொருளாதார, வர்த்தக மற்றும் தொழில் அமைச்சகத்துடன் (METI) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம், JETRO நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம், ஜப்பான் வணிக மற்றும் தொழில் பேரவை (JCCI) ஆகிய நிறுவன ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கனகாவா, ஹிரோஷி மாகாணங்களுடன் பொருளாதார புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.

ஜப்பானிய நாட்டின் மிகப் பெரும் வங்கிகளான, பேங்க் ஆஃப் டோக்கியோ, உள்ளிட்ட மூன்று வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பல மாகாணங்களுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**இலட்சிய இலக்கு!**

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை வடிவமைத்திடுவதில் முக்கியப் பங்காற்றிடும் விதமாக, 2030 நிதியாண்டி ற்குள், 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்றுவதற்கான ஒரு இலட்சிய இலக்கினை நிர்ணயித்து, அந்தப் பாதையில் பயணித்து வருகிறோம். கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டுமே இதுவரை 5 ஆயிரத்து 596 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 4244 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், 5 ஜப்பானிய நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளன.

டைசல் கார்ப்பரேஷன், மிட்சுபிஷி, மதர்சன் ஆட்டோ சொல்யூஷன்ஸ், ரெனோநிஸ்ஸான் விரிவாக்கத் திட்டம் மற்றும் மக்கினோ போன்ற பல நிறுவனங்கள் தங்கள் திட்டங்களை நிறுவுவதற்காக, சமீபத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளன.

இன்னும் பல நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்குத் தேவையான பல்வேறு தொழிற் கொள்கைகளையும் நாங்கள் வெளியிட்டுள்ளோம்.

நிதிநுட்பக்கொள்கை, ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை, உயிர் அறிவியல் கொள்கை, ஆராய்ச்சி & மேம்பாட்டுக் கொள்கை, விண்வெளி & பாதுகாப்புக்கொள்கை, காலணி மற்றும் தோல்பொருட்கள் கொள்கை மற்றும் தொழில்நுட்ப ஜவுளிகளுக்கான ஒரு சிறப்பு ஊக்குவிப்புத் திட்டம் என்று பல கொள்கைகளை வெளியிட்டு இருக்கிறோம்.

**முதலீட்டாளர்கள் விரும்பும் மாநிலமாக தமிழ்நாடு!**

ஒவ்வொரு திட்டத்திற்கும் தேவைப்படும் அனுமதிகளை விரைவாகப் பெற்றிடும் பொருட்டு, Single Window Portal 2.0 மற்றும் TNSWP App ஆகியவற்றையும் அறிமுகப்படுத்தி இருக்கிறோம்.

இதன் பொருட்டே, முதலீட்டாளர்கள் விரும்பும் மாநிலமாக, தமிழ்நாடு சிறந்து விளங்கி வருகிறது. அதனால்தான் எங்களுடன் இணைந்திடுமாறு, உங்களுக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

ஜப்பானிய நிறுவனங்கள் பெரும்பாலும் உற்பத்தி சார்ந்த துறைகளில் மட்டுமே முதலீடு மேற்கொள்ள விழைகின்றன.

இந்நிலையைச் சற்றே விரிவுபடுத்தி, மேம்பாட்டுத் திட்டங்களிலும் முதலீடு மேற்கொள்ள வருமாறு, இத்தருணத்தில் உங்களுக்கு நான் அழைப்பு விடுக்கிறேன். மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில், புதிய தொழில் பூங்காக்களை அமைத்து வருகிறோம்.

**தமிழ்நாட்டின் முன்னேற்றத்துக்குப் பயன்படும் நல்லுறவு!**

மேலும், மருத்துவ சாதனங்கள் பூங்கா, உணவுப் பூங்காக்கள், மின் வாகனங்களுக்கான பூங்கா மற்றும் வருங்கால நகர் திறன் பூங்கா, மின்னணுவியல் உற்பத்தித் தொகுப்புகள்,ஒருங்கிணைந்த ஆடை மற்றும் ஜவுளி பூங்கா, தோல் காலணிகள் மற்றும் உப பொருட்களின் உற்பத்தித் தொகுப்புகள் மற்றும் நிதிநுட்ப நகரம் என்று பல்வேறு துறை சார்ந்த உட்கட்டமைப்புகளை நாங்கள் வலுப்படுத்தி வருகிறோம். இத்துறைகளில், உங்களின் மேலான முதலீடுகளை நாங்கள் வரவேற்கிறோம். உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடாக ஜப்பான் இன்று திகழ்ந்து வருகிறது.

இன்று உலக நாடுகள் தனித்து வளர்ந்துவிட முடியாது. பரஸ்பர நட்பின் மூலமாக, நல்லுறவின் மூலமாகத்தான் வளர முடியும். இந்தியாவுடன் உள்ள அந்த நல்லுறவை குறிப்பாகத் தமிழ்நாட்டு முன்னேற்றத்துக்குப் பயன்படுத்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**முதலீட்டாளர்களுக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு!**

உயர்ந்த மனித வாழ்வியல் நெறியைக் கொண்ட நாடு ஜப்பான். அந்த அடிப்படையோடு தமிழ்நாட்டின் தொழில் மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கு நீங்கள் பங்களிக்க முதலீட்டாளர்களை சிவப்புக் கம்பளம் விரித்து தமிழ்நாடும், வரவேற்கிறது என்றுரைத்து விடை பெறுகிறேன்.

இவ்வாறு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஜப்பான் நாட்டின் பல்வேறு நிறுவனங்களின் முதன்மை அலுவலர்களுடனான மதிய உணவுடன் கூடிய சந்திப்பு நிகழ்வில், ஒசாகா மாகாணத்தின் துணை ஆளுநர் நோபுஹிகோ யமாகுஜி அவர்களை (Osaka Province Vice Governor Mr. Nobuhiko Yamaguchi) மரியாதை நிமித்தம் சந்தித்துப் பேசினார்.

இந்த நிகழ்வில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன், தொழில் வணிக ஆணையர் திருமதி சிஜி தாமஸ் வைத்யன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, ஒசாகாவிற்கான இந்தியத் தூதர் நிகிலேஷ் கிரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## அமைச்சர் க.பொன்முடி பேட்டி!...

முதல் பக்கத் தொடர்ச்சி

*அரசின் மும்மொழிக் கொள்கை திட்டத்தில் மூன்றாவது மொழியை திணிப்பதற்கான வழிமுறைகளை தடுத்து நிறுத்தச் சொல்லுங்கள். நான் எந்த ஊடகங்கள் வழியிலும் தமிழ்வழி கல்வி கற்பது குறித்து பேசவில்லை , அவரோடு எந்த மேடையில் வேண்டுமானாலும் நேருக்கு நேர் பேசத் தயாராக இருக்கிறேன். அவர் தயாராக இருக்கிறாரா?*

*இது குறித்து நான் துணைவேந்தரிடம் கேட்டதற்கு மாணவர்களின் சேர்க்கை குறைவாக இருக்கிறது என காரணம் சொன்னார். அ.தி.மு.க. ஆட்சியில் உள்ள துணைவேந்தர் சூரப்பா போல் இல்லாமல் தற்போது உள்ள துணைவேந்தர் தொலைபேசியில் சொன்னவுடன் ஏற்றுக் கொண்டு தனது அறிக்கையை திரும்பப் பெற்று தமிழ்வழிக் கல்வி தொடரும் என தெரிவித்தார். மாணவர்கள் சேர்க்கை குறைவாக இருந்தாலும் தமிழ் வழிக் கல்வி தொடர வேண்டும் என தெரிவித்துக் கொள்கிறேன். இ.பி.எஸ். கூட இது குறித்து அறிக்கை வெளியிட்டுள்ளார். அவர் முன்னாள் துணைவேந்தர் சூரப்பாவிடம் என்ன பாடுபட்டார் என்பது நாம் அனைவரும் அறிந்ததே.*

*இதனால் தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலேயே துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரம் மாநில அரசுக்கு உரிமை இருக்க வேண்டும் என சட்டம் நிறைவேற்றினார். ஆனால் அதற்கு ஆளுநர் அவர்கள் அதற்கு கையெழுத்திடவில்லை.*

*இதற்காகத்தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து மாநில அரசிற்கு அதிகாரம் வழங்குங்கள் என வலியுறுத்தி வருகிறார். தமிழ் மொழி வளர்ச்சிக்கு பேரறிஞர் அண்ணா ,முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ் மொழியின் வளர்ச்சி பல்வேறு திட்டங்களை தீட்டி வருகிறார்.*

*இவ்வாறு அமைச்சர் க. பொன்முடி பேட்டியளித்தார்.*


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**

கீழ்காணும் பணியினை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர் (SWD/Mech) அவர்களால் குறுகிய கால மறு மின்னனு ஒப்பம் கோரப்படுகிறது

இ.பொ.து.ந.க.எண். எம்1/1924B/2022,
50 எண்ணிக்கையிலான இலகுரக காம்பாக்டர் வாகனங்களை இரண்டாண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு மேற்கொள்ளும் பணி.

முன்வைப்பு தொகை : ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி

ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் : 08.06.2023 பிற்பகல் 3.00, மணி

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : 09.06.2023 பிற்பகல் 3.30 மணி

மேலும் விவரங்களுக்கு : http://tntenders.gov.in இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2741 / ஒப்பந்தப்புள்ளி / 2023 மேற்பார்வை பொறியாளர் (இ/ம.நீ.வ.,)

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்